# Deposition of Witness

In the Court of the Principal District Judge, Vellore District.

**Spl.C.C.No.2 of 2025**

(Spl.C.C.No.4 of 2020- CJM, Vellore)

Prosecution Witness No.P.W.14 (L.W.25)

| | |
|---|---|
| Name | திருநாவுக்கரசு |
| Father/Husband Name | எட்டியப்பன் |
| Calling/Occupation | காவல் துணை கண்காணிப்பாளர் |
| Age | 54 |
| Address | சென்னை மத்திய குற்றப்பிரிவு. |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 02.02.2026.

(A1, A2 and A4 Present)

**முதல் விசாரணை**

நான் தற்போது சென்னை மத்திய குற்றப்பிரிவில் காவல் துணை கண்காணிப்பாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 2015ம் வருடம் வேலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவில் நான் காவல் ஆய்வாளராக பணியாற்றினேன். வேலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலக DE 71/2014/RDP/VL என்ற விரிவான விசாரணை கோப்பினை நான் மேல் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு வேலூர் மாவட்டம் பேரணாம்பட்டு ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட குண்டலப்பள்ளி பஞ்சாயத்தில் உள்ள கோக்கலூர் கிராமத்தில் பொதுமக்களின் குடிநீர் விநியோகத்திற்காக ஊராட்சி ஒன்றிய

அலுவலகம் மூலம் புதிய போர்வல் அமைத்து அதில் மோட்டாருடன் சின்டெக்ஸ் டேங்க் வைக்கும் பணி 2012–2013ல் பொது நிதியில் 1,99,000/– மதிப்பில் டென்டர் விடப்பட்டுள்ளது. ஆனால் கோக்கலூர் கிராமத்தில் ஏற்கனவே இருந்த கை பம்பை எடுத்துவிட்டு அதில் மின் மோட்டார் பொருத்தி சின்டெக்ஸ் டேங்க் வைக்கப்பட்டதாகவும், அதேபோல் குண்டலப்பள்ளி கிராமத்தில் உள்ள இரட்சை தெருவில் 2011–2012 ம் வருடம் தாய் திட்டத்தில் 1,30,544/– ரூபாய் மதிப்பில் சிமெண்ட் சாலை போடப்பட்டதாக கணக்கு காட்டப்பட்டு, சாலை எதுவும் போடப்படவில்லை என்பது தெரிய வந்தது.

இந்த குற்றச்சாட்டுகள் தொடர்பாக திரு.செல்வபாபு, திரு.சுரேஷ் பாபு, திரு. அன்பழகன், திரு.ராஜேந்திரன், திரு.விக்டர் அமிர்தராஜ் ஆகியோர்களுக்கு தொடர்பு இருப்பது உறுதியானதால், 13.02.2015 ம் தேதி எனது அறிக்கையை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை இயக்குநரகத்திற்கு அனுப்பி வைத்தேன். அதன் பெயரில் ஊழல் தடுப்பு ஆணையர் அவர்களின் கடித எண் 950/VC–1–2015–1, தேதி 16.03.2015 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய உத்தரவு வந்ததால் 04.05.2015 அன்று வேலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 7/2015, பிரிவுகள் 120(B), 409, 467, 468, 471, 477 (A), 420 இ.த.ச மற்றும் 13(2) உடன் இணைந்த 13(1)(d) of PC Act 1988 ன் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். முதல் தகவல் அறிக்கையின் நகல் Spl.CC.No.3 of 2025ன் முதல் தகவல் அறிக்கையின் (அ.த.சா.ஆ.12) நகலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது. **முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.16 ஆகும்.**

அந்த முதல் தகவல் அறிக்கையை கனம் முதன்மை நீதித்துறை குற்றவியல் நடுவர் மற்றும் சிறப்பு வழக்கறிஞர் ஆகியவர்களுக்கு அனுப்பி வைத்தேன். பின்னர் இயக்குநரக உத்தரவின் படி இந்த வழக்கு கோப்பை ஆய்வாளர் திரு.அசோகன் அவர்களிடம் ஒப்படைத்தேன்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

Detail Enquiry(DE) என்னை நான் முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எனக்கு முன்பு ரஜினிகாந்த் DE செய்தார். ரஜினிகாந்தை DE க்காக நியமனம் செய்தார்கள். அதற்குள் அவர் பணி மாறுதல் ஆகிவிட்டார். எனவே நான்தான் விரிவான விசாரணை (DE) செய்தேன். போர் போடாமலேயே மோட்டார் போட்டதாக சொல்லப்பட்ட குண்டலப்பள்ளி கோக்களூர் கிராமத்திற்கு நான் சென்று பார்த்தேனா என்றால் பார்த்தேன்.

ஆனால் அளந்து பார்க்கவில்லை. அளந்து பார்க்காமலேயே போர் போடாமல் மோட்டார் வைத்துவிட்டார்கள் என்று எப்படி எனக்கு தெரியும் என்றால் நேரில் பார்த்தபோது அது பழைய சின்டெக்ஸாக இருந்தது, போரும் பழைய போராக இருந்தது. அதை சாட்சிகளும் அங்கு புதியதாக போர் போடப்படவில்லை என்று தெரிவித்தார்கள்.

நான் பதிவு செய்த வாக்குமூலங்களில் சாட்சிகள் போர் பழைய போராக தெரிந்தது, அங்கு இருந்த சின்டெக்ஸ்ம் பழையதாக இருந்தது என்றும் அங்கு உள்ள பொதுமக்களும் புதியதாக போர் எதுவும் போடப்படவில்லை என்று வாக்குமூலத்தில் நான் பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். நான் சம்பவ இடத்திற்கு போகததால்தான் நான் என் வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரியல்ல.

DE விசாரணையின்போது நான் எந்த எந்த சாட்சிகளை விசாரணை செய்தேன் என்று தற்போது நினைவில்லை. DE கோப்பினை பார்த்தால்தான் சொல்ல முடியும். தற்போது DE கோப்பு நீதிமன்றத்திற்கு அனுப்பப்படவில்லை என்றால் நான் அனுப்பவில்லை. இன்று வரை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தார்களா என்று எனக்கு தெரியாது. நான் அவ்வாறு எந்தவிதமான சாட்சிகளையும் விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. அதனால்தான் DE கோப்பை நீதிமன்றத்திற்கு அனுப்பவில்லை என்றால் சரியல்ல.

நான் போய் பார்த்தபோது அது எத்தனை இன்ச் போராக இருந்தது என்றால் நினைவில்லை. கை பம்பை எடுத்துவிட்டு மோட்டார் போட்டதாக சொல்லும் நான் 6 இன்ச் போர் இருந்தால்தான் நீர் மூழ்கி மோட்டார் இறக்க முடியும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. போர் மோட்டார், சின்டெக்ஸ், பைப் அமைக்க டென்டர் ரூபாய் 2 லட்சத்திற்கு விடப்பட்டது என்றால் சரிதான்.

சிமெண்ட் சாலை அமைக்க டெண்டர் ரூபாய் 1,31,200/- க்கு விடப்பட்டது என்றால் சரிதான். கோக்களூர் கிராம பஞ்சாயத்தின் சொத்து ஆவண பதிவேட்டினை நான் வாங்கி பார்த்தேனா என்றால் நினைவில்லை. அந்த ஆவணத்தை நான் கைப்பற்றினேனா என்றால் ஞாபகமில்லை. அந்த சொத்து பதிவேட்டில் 1987 ல் வெறும் 83 அடி 4 1/2 இன்ச் போடப்பட்டதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் நினைவில்லை. சொத்து பதிவேட்டை நான் பார்த்தேனா என்றே நினைவில்லை. DE கோப்பினை பார்த்தால்தான் தெரியும்.

174 மீட்டர் 4 1/2 இன்ச் போரை முழுவதுமாக Flush Out செய்துவிட்டு அதை 6 இன்ச் போராக 174 மீட்டர் போட்டு அதன் பின்னர்தான் நீர் மூழ்கி மோட்டார், பைப் மற்றும் சின்டெக்ஸ் பொருத்தப்பட்டிருந்தது என்றால் சரியல்ல. நான் சரிவர அதனை பார்க்காமல் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன் என்றால் சரியல்ல. நான்அந்த இடத்தை ஆய்வு செய்யவில்லை என்றால் சரியல்ல.

சிமெண்ட் சாலை அமைக்க குண்டலப்பள்ளி கிராமத்தில் இரட்சை தெருவில் தாய் திட்டத்தின்படி டெண்டர் கோரப்பட்டது என்றால் சரிதான். அந்த தாய் திட்டத்திற்கு முன்னர் அந்த கிராமத்தில் எத்தனை சாலைகள் போடப்பட்டுள்ளது, எத்தனை கிணறுகள் உள்ளது என்றும், எத்தனை போர்வேல்கள் உள்ளது என்றும் மற்றும் செய்தது என்ன செய்ய வேண்டியது என்ன என்று அறிக்கையை தயார் செய்து அரசாங்கத்திற்கு அனுப்பி அதை இணைதளத்தில் வெளியிட்டார்களா என்றால் அது பற்றி நான் விசாரிக்கவில்லை.

குண்டலப்பள்ளி இரட்சை தெருவின் நீளம் 157 மீட்டர் என்றும் அதில் ஏற்கனவே 75 மீட்டர் சிமெண்ட் சாலை போடப்பட்டுள்ளது என்றும் மீதம் உள்ள இடம் மண் சாலையாக உள்ளது என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

அந்த அறிக்கையின்படி மண் சாலையாக இருந்த இடத்தில்தான் 64 மீட்டர் சிமெண்ட் சாலை அமைக்கப்பட்டது என்றால் சரியல்ல. சம்பவ இடத்திற்கு செல்லாமல் சிமெண்ட் சாலை போடப்பட்டதை பார்க்காமல் சிமெண்ட் சாலை போடவில்லை என்று தவறாக வழக்கு

பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. குளோரி என்பவரின் வீட்டிற்கு அருகில்தான் இந்த சாலை அமைக்கப்பட்டிருந்தது என்றால் ஞாபகமில்லை.

முதல் தகவல் அறிக்கையில் முனுசாமியின் டெண்டர் பார்மில் அவரின் கையொப்பம் இல்லாமல் டெண்டர் கொடுக்கப்பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். Tender Schedule A–ல் முனுசாமியின் கையொப்பம் உள்ளது என்றால் சரியல்ல. அவரின் கையொப்பம் Schedule A–ல் இல்லை. டெண்டரில் அவரின் கையொப்பம் உள்ளது.

Tender Schedule A and Comparative statement ஆகிய இரண்டு தாள்களிலும் ஒப்பந்ததாரருக்கு கொடுக்கப்பட்டது என்பதை காட்ட அதிகாரியின் கையொப்பம் மற்றும் அலுவலக சீல் இல்லை என்றால் முதல் இரண்டு தாள்களில் இல்லை ஆனால் மொத்த ஆவணமும் அதனுடன் இணைக்கப்பட்டுள்ள மற்ற தாள்களையும் சேர்த்துதான் ஒரு Form ஆகும். டெண்டர் பார்ம் வழங்கப்பட்டதில் Block Development Officer scheme, Panchayat Union, Pernampet அதிகாரி சீல் போட்டு கையொப்பம் செய்து கொடுத்திருக்கிறார்.

அதில் செல்லான் எண் 45/2011–12 என்றும் தேதி 12.02.2012 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் அந்த டெண்டர் பார்மில் உள்ள Schedule A–ல் முனுசாமி ஒப்பந்ததாரரின் (Contractor) கையொப்பம் உள்ளது என்றால் பக்கம் 4ல் மட்டும் இல்லை மற்ற பக்கங்களில் contractor என்ற இடத்தில் அவரின் கையொப்பம் உள்ளது. பக்கம் 6ல் உள்ள Schedule ல் உள்ள Schedule A and B க்கு கீழும் முனுசாமியின் கையொப்பம் உள்ளது.

டெண்டர் பார்ம் Foolscap அளவில் உள்ளது என்றால் சரிதான். முதலாவதாக இருக்கும் இரண்டு தாள்கள் A4 அளவில் பின்புறம் இணைக்கப்பட்டுள்ளது என்றும் அது கம்ப்யூட்டரில் பிரிண்ட் அவுட் எடுக்கப்பட்டு இணைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் Foolscap பேப்பரில் அச்சிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

எனவே, அவர் கையொப்பம் போட்டு முறைப்படிதான் டெண்டர் பார்மை சமர்ப்பித்துள்ளார் என்றும் நான் தவறாக முதல் தகவல் அறிக்கையில கையொப்பம் இல்லை என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. A4 அளவில் உள்ள இரண்டு தாள்களும் டெண்டர் பார்மில் இல்லை என்றால் சரியல்ல. அதனால்தான் அதில் அலுவலக சீல் மற்றும் அதிகாரியின் கையொப்பம் இல்லை என்றால் சரியல்ல.

அந்த டெண்டரில் சரவணக்குமார் என்பவர் பங்கேற்கவில்லை என்று எதன் அடிப்படையில் நான் முதல் அறிக்கையில் கூறினேன் என்றால் சரவணக்குமாரை விசாரித்ததின் அடிப்படையில் கூறினேன். அந்த வாக்குமூலத்தை நான் நீதிமன்றத்திற்கு அனுப்பவில்லை. அவரை விசாரிக்காததால்தான் நான் நீதிமன்றதிற்கு அவரின் வாக்குமுலத்தை அனுப்பி வைக்கவில்லை என்றால் சரியல்ல.

டெண்டர் கோரும்பட்சத்தில் டெண்டர் கோருபவர்கள் Earnest Money Deposit செய்ய வேண்டும் என்றாலும் அவ்வாறு சரவணக்குமாரும் Earnest Money Deposit செய்துள்ளார் என்றால் அதை நான் விசாரிக்கவில்லை. பஞ்சாயத்து யூனியில் அலுவலகத்தில் கோரும் டெண்டர் கிடைக்கவில்லை என்றால் அந்த Earnest Money

Deposit பணத்தை டெண்டர் கிடைக்காத ஒப்பந்ததாரர்கள் திரும்ப பெற்றுக்கொள்வார்கள் என்றால் நான் அந்த ஆவணத்தை வாங்கி பார்க்கவில்லை.

சரவணக்குமார் என்பவர் டெண்டர் கிடைக்காததால் அவர் முன் வைப்பு தொகையை திரும்ப பெற்றுள்ளார் என்பது அந்த ஆவணத்தை வாங்கி பார்த்திருந்தால் தெரிய வந்திருக்கும் என்றாலும், அதை பார்த்திருந்தால் முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்ய முகாந்திரம் இல்லை என்ற விவரம் தெரிய வந்திருக்கும் என்றால் சரியல்ல.

சரவணக்குமார் டெண்டரில் பங்கேற்றாரா என்ற விவரத்தை பேரணாம்பட்டு பிடிஓ அலுவலகம் சென்று நான் விசாரித்தேனா என்றால் விசாரிக்கவில்லை.

பிடிஓ அலுவலகத்திற்கு சென்று பார்த்திருந்தால் விவரம் தெரிய வந்திருக்கும் என்றும் தீர விசாரிக்காமலேயே முதல் தகவல் அறிக்கை நான் பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்குக்கும் எதிரிகளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

சம்பவ இடத்திற்கு சென்று நான் விசாரித்தேன் என்று சொல்லும் நிலையில் பார்வை மகசர் அல்லது மாதிரி வரைபடமாவது தயார் செய்தேனா என்றால் இல்லை. நான்சம்பவ இடத்திற்கு போகவில்லை என்றும் அதனால்தான் மேற்கண்ட ஆவணங்கள் மற்றும் மாதிரி வரைபடத்தை நான் தயாரிக்கவில்லை என்றால் சரியல்ல.

சரவணக்குமார் டெண்டரில் கலந்துக்கொள்ளவில்லை என்பதற்கு மாதிரி கையொப்பம் பெற்று தடய அறிவியல் துறைக்கு அனுப்பி வைத்தேனா என்றால் இல்லை.

**மறுவிசாரணை – இல்லை.**

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு கையெழுத்திட்டார்.

ஒப்பம்/– (G.சாந்தி)
முதன்மை மாவட்ட நீதிபதி (பொறுப்பு),
வேலூர்.